இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்ட

# 25 மீனவர்களை விடுவித்திட உடனே நடவடிக்கை எடுத்திடுக!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு கடிதம்!

சென்னை, ஜூலை 4-

இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள 25 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் - பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டியும் - ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த 25 மீனவர்கள் பாக் ஜலசந்தி மற்றும் மன்னார் வளைகுடா கடல்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த நிலையில், நேற்று முன்தினம் (01.07.2024) இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஒன்றிய அரசை வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (2-7-2024) கடிதம் எழுதியுள்ளார்.

முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், சமீப வாரங்களில் இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளதாகக் கவலைபடத் தெரிவித்துள்ளதோடு, IND-TN-10-MO-1379 மற்றும் IND- TN-09-MO-2327 என்ற பதிவெண்களைக் கொண்ட இரண்டு மோட்டார் பொருத்தப்பட்ட நாட்டுப் படகுகளிலும், இரண்டு பதிவு செய்யப்படாத மீன்பிடிப் படகுகளிலும் சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 25 மீனவர்கள் 1-7-2024 அன்று இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப் பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

1974 ஆம் ஆண்டிலிருந்தே, அப்போதைய ஒன்றிய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வைத் தொடர்ந்து இந்தப் பிரச்சினை நிலவுவதாக ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் அவர்கள் தனது 27-6-2024 நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதைக் கோடிட்டுக் காட்டியுள்ள முதலமைச்சர் அவர்கள், தி.மு.க. தலைமையிலான மாநில அரசு கச்சத்தீவு ஒப்பந்தத்தை அப்போது முழுவீச்சில் எதிர்த்தது என்பதையும், தனது எதிர்ப்பை தமிழ்நாடு சட்டமன்றத்திலும், நாடாளு மன்றத்திலும் எதிரொலித்தது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்பு வதாகக் குறிப்பிட்டுள்ளார். ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு, இது சம்பந்தமாக மாநில அரசுடன் முறையாக கலந்தாலோசிக்கவில்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்று என்று குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், இந்திய மீனவர் களின் உரிமைகளுக்கும், நலன்களுக்கும் ஆபத்தை விளைவிக்கும் வகையிலும், அவற்றைப் பறிக்கும் வகையிலும் கச்சத்தீவை முழுமையாக இலங்கைக்கு விட்டுக் கொடுத்தது அப்போதைய ஒன்றிய அரசுதான் என்று தனது கடிதத்தில் அழுத்தந்திருத்தமாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனது தலைவரும், அப்போதைய தி.மு.க. தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாண்பமை உச்சநீதிமன்றத்தில் ஒரு பிரமாணப் பத்திரத்தைத் தாக்கல் செய்து, அதில் "ஒன்றிய அரசு மேற்கொண்ட அனைத்து நடவடிக்கைகளும் அரசியலமைப்பிற்கு முரணானதாக இருக்கும் போது, கச்சத்தீவின் இறையாண்மை ஒரு தீர்க்கப்பட்ட விஷயம் என்று கூற முடியாது" என்று திட்டவட்டமாகக் கூறியி ருந்ததை முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் நினைவு கூர்ந்துள்ளார். பா.ஜ.க. தலைமையிலான அரசு தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சியில் இருந்தாலும், இந்தப் பிரச்சினையை தேர்தல் நேர முழக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தி வருவதாகவும், கச்சத்தீவை மீட்க குறிப்பிடத்தக்க அர்த்தமுள்ள எந்த முயற்சியையும் அது எடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களுக்கு நிரந்தரத் தீர்வு காண்பது காலத்தின் கட்டாயமாகும் எனத் தெளிவுபடக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தமிழ்நாட்டு மீனவர்களின் பாரம்பரிய உரிமைகளை நிலை நாட்டும் வகையில், மீனவர்களுக்குத் தொடர்ந்து இடையூறு விளைவித்து வரும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணத் தேவையான, உறுதியான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் அவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

சமஸ்கிருதத்தில் பெயரிடுவதை நாங்கள் முதலிலேயே எதிர்த்தோம்!

# நாடாளுமன்ற அமளியின் போது - குற்றவியல் சட்டங்களை நிறைவேற்றுவதா?

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, ஜூலை 4-

"நாடாளுமன்றத்தில் அமளி நடந்துகொண்டிருந்தபோது, குற்றவியல் சட்டங்களை நிறைவேற்றுவதா?" என கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தி.மு.க சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர். இளங்கோ எம்.பி. வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:

ஒன்றிய உள்துறை அமைச்சர் அவர்கள், "புதிய மூன்று குற்றவியல் சட்டங்கள் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இதன் செயல்முறையும் தமிழில் நடைபெறும். தமிழ்நாடு முதலமைச்சரோ, நாடாளுமன்ற உறுப்பினர்களோ இவற்றின் பெயர்களுக்கான அவர்களின் எதிர்ப்பு குறித்து கலந்தாலோசிக்க நேரம் கோரவில்லை. நான் அவர்களிடம் மீண்டும் கூறிக்கொள்கிறேன். உங்களுக்கு ஏதேனும் குறைகள் இருந்தால் என்னைச் சந்தியுங்கள். சட்டங்களைப் புறக்கணிப்பது சரியாகாது" என்று இச்சட்டங்கள் தொடர்பாகத் தமிழ்நாடு முதலமைச்சரின் ஆட்சேபணை தொடர்பாகக் கருத்து தெரிவித்திருப்பதாக,

தி இந்து' ஆங்கில நாளேட்டில் செய்தி வெளியாகியுள்ளது.

புதிய மூன்று குற்றவியல் சட்டங்களுக்கு சமஸ்கிருதத்தில் பெயரிடுவதற்கு நாடாளுமன்றத் தேர்வுக் குழுவில் நாங்கள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்தோம்.

இச்சட்ட முன்வடிவுகள் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட போது, நாடாளுமன்ற அவைக்குள் நடந்த அத்துமீறல் குறித்து எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்திக்கொண்டிருந்தனர் என்பது அனைவரும் அறிந்த ஒன்று.

ஒன்றிய அரசுக்கு உண்மையாகவே ஜனநாயக உணர்வு இருக்குமானால், எதிர்க்கட்சியினர் அவையினில் இல்லாதபோது இந்தச் சட்டங்களை நிறைவேற்றியிருக்கக் கூடாது.

ஜனநாயகத்தைக் கடைபிடியுங்கள், போதிக்காதீர்கள்!

இவ்வாறு என்.ஆர். இளங்கோ, தமது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

விக்கிரவாண்டி தொகுதியில்

# பா.ம.க. வேட்பாளர் டெபாசிட் இழப்பது உறுதி!

## காணை ஒன்றியத்தில் அமைச்சர் எ.வ.வேலு பிரச்சாரம்!

விழுப்புரம், ஜூலை 4-

விக்கிரவாண்டி தொகுதி இடைத்தேர்தல் காணை வடக்கு ஒன்றியத் திற்குட்பட்ட ஊராட்சிகளில் இந்தியா கூட்டணி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து நேற்று முன்தினம் (செவ்வாய்க்கிழமை) காலை 07.30மணி முதல் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வாக்குச் சேகரித்தார்.



நிகழ்ச்சியில் சட்டப்பேரவை துணை தலைவர் கு.பிச்சாண்டி, விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் பொன்.கவுதமசிகாமணி, மாநில மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், சட்டமன்ற உறுப்பினர்கள் க.தேவராஜ், அ.செ.வில்வநாதன், பெ.சு.தி.சரவணன், எஸ்.அம்பேத்குமார், ஒன்றியச் செயலாளர்கள் ஆர்.முருகன், ஜி.ரவிச்சந்திரன், அ.ச.பிரபு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

நல்லாப்பாளையம், கடையம், புதுக்கருவாட்சி, பழைய கருவாட்சி, சி.என்.பாளையம், வெள்ளையாம்பட்டு, நங்காத்தூர், சங்கீதமங்கலம், உமையாள்புரம், பனமலைபேட்டையில் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை விளக்கி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு பொது மக்களிடம் வாக்கு சேகரித்த போது, கழக தலைவர் மு.க.ஸ்டா லின் அவர்களால் அறிவிக்கப்பட்ட வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா இந்த பகுதியை சேர்ந்த உங்களில் ஒருவரான அவருக்கு நீங்கள் எல்லாம் உதயசூரியன் சின்னத்திற்கு உங்கள் வாக்குகளை அளிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இந்த பகுதியில் ஒருவார காலமாக தேர்தல் பணியில் ஈடுபட்டு வருகிறேன் நான் பார்த்த அளவில் எதிர்த்து நிற்கும் வேட்பாளர் டெபாசிட் இழப்பது என்பது உறுதியாகி விட்டது, இதற்கு காரணம் கடந்த மூன்று ஆண்டுகால ஆட்சியில் தமிழக முதல்வர் பொது மக்களுக்கு அறிவித்துள்ள எண்ணற்ற திட்டங்களால் நல்லாப்பாளையம் ஊராட்சிக்கு மட்டும் 2 கோடியே 14 இலட்சம் ரூபாயில் திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு வாக்குச் சேர்த்தார்.

அமைச்சர் வாக்குச் சேகரித்த போது அங்கிருந்த பொது மக்கள், வேட்பாளர் அன்னியூர் சிவா எங்கள் பகுதியை சார்ந்தவர் நாங்கள் எல்லாம் முடிவு செய்து விட்டோம். எங்கள் வாக்கு உதயசூரியன் சின்னத்திற்கு என்று கூறினார்கள்.

ஏழிசை மன்னர் எம்.கே.தியாகராஜ பாகவதர் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவித்த

# முதல்வருக்கு தமிழ்நாடு விஸ்வகர்ம முன்னேற்றச் சங்கம் நன்றி!

## சங்கக் கூட்டத்தில் தீர்மானம்!

சிதம்பரம், ஜூலை 4 -

சிதம்பரத்தில் நடைபெற்ற தமிழ்நாடு விஸ்வகர்ம முன்னேற்ற சங்க கூட்டத்தில் திரை உலகின் முதல் சூப்பர் ஸ்டார் "ஏழிசை மன்னர்" எம்.கே.தியாகராஜ பாகவதர் பிறந்த நாளான மார்ச் 1ம் தேதியை அரசு விழாவாக கொண்டாடப்படும் என அறிவித்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்திற்கு சங்க மாநில தலைவர் ஜி.சேகர் தலைமை தாங்கினார்.

எம்.திருஞானம், கு.நடராஜன், தொழிற்சங்க செயலாளர் ஆர்.இராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நகரச் செயலாளர் பி.முத்துக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நடந்து முடிந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜ பாகவதர் பிறந்த நாளான மார்ச் 1ம் தேதியை தமிழ்நாடு அரசு அரசு விழாவாக கொண்டாடும் என அறிவித்துள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், செய்தி ஒளிபரப்பு துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதனுக்கும் தமிழ் நாட்டில் வாழுகின்ற 60 லட்சம் விஸ்வகர்ம சமூக மக்களின் சார்பாக இக்கூட்டத்தில் நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிகழ்ச்சியில் எஸ்.ரமேஷ், எம்.சுரேஷ், ஆர்.கனகசபை, ஆர்.சேகர், ஜி.முருகன், ஆர்.சிவா, ராஜா, கே.பாலாஜி, பி. சிவக்குமார், எம்.தண்டபாணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவில் நகரப் பொருளாளர் எஸ்.ராஜ்குமார் நன்றி கூறினார்.



கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணைக்கிணங்க விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் கழகத்தின் சார்பில் போட்டியிடும் அன்னியூர் ஏ.சிவாவை ஆதரித்து ஆத்தூர் ஊராட்சியில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வாக்குச் சேகரித்தார்.

உத்தரப்பிரதேசம் – ஹாத்ரசில்

# கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழப்புகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 4–

உத்தரப் பிரதேச மாநிலம் ஹாத்ரசில் உயிரிழுந்தவர்களின் குடும்பத்தினருக்கு, இரங்கல் தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

உத்தரப்பிரதேச மாநிலம் ஹாத்ரசில் நிகழ்ந்த கூட்ட நெரிசலில் சிக்கிப் பலர் உயிரிழந்த துயரத்தால் மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்தோரின் குடும்பத்தினருக்கு எனது இதயப்பூர்வமான இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைந்து நலம்பெற வேண்டுமென விழைகிறேன்.

இக்கடினமான நேரத்தில், பாதிக்கப்பட்ட மக்களுக்குத் துணையாக இருப்போம்.

இவ்வாறு - அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

ரிஷிவந்தியம் - ஆதி திருவரங்கம்

# அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்காக தங்கும் விடுதி கட்டப்படுமா?

## சட்டப்பேரவையில் வசந்தம் கார்த்திகேயன் கேள்வி!

சென்னை, ஜூலை 4-

சட்டப்பேரவையில் ரிஷிவந்தியம் தொகுதி உறுப்பினர் வசந்தம் கார்த்திகேயன் எழுப்பிய கேள்வியும், அமைச்சர் பி.கே. சேகர்பாபு அளித்த பதிலும் வருமாறு:-



**வசந்தம் கார்த்திகேயன்:** ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியம், ஆதி திருவரங்கம் அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு தங்கும் விடுதிக் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் பி.கே. சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற திருக்கோயில் என்பது அரங்கநாதனின் மச்சவதாரம் கொண்ட முதல் திருக்கோயில். இந்தத் திருக்கோயிலுக்கு ரூ.10 கோடி செலவிலே திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நடைபெற்று வருகின்றன. உறுப்பினர் அவர்கள் கோரிய பக்தர்கள் தங்கும் விடுதி 86.50 இலட்சம் ரூபாய் செலவில் பணி கோரப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி வருகின்ற 16.7.2024 அன்று திறக்கப்படவிருக்கிறது. ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு, பணி இறுதி செய்யப்பட்ட பிறகு அடுத்த மாத இறுதிக்குள் அந்த பக்தர்கள் தங்கும் விடுதிக்கு அவர்களே சிறப்பு பூஜை செய்து, பணிகளைத் தொடங்கிக்கொள்ளலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தளபதி அவர்களின் தலைமையில் இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு, 17 திருக்கோயில்களில் பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்காக, ரூ.70 கோடி செலவில் கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**க. கார்த்திகேயன்:** ஆன்மிகப் பெருமக்கள் பெறும் வகையில், பயன்படும் வகையில் தங்கும் விடுதி அமைக்க ஒப்புதல் அளித்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மூன்றாண்டுகளில், கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சுமார் 45 கோடி ரூபாய் செலவில் எண்ணற்ற கோயில்களுக்கு திருப்பணிகள், குடமுழுக்கு, புதிய தேர் என அமைத்துக் கொடுத்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி வட்டம், திருவரங்கம் ஊராட்சியிலுள்ள பசுபதீஸ்வரர் கோயில் மிகவும் பழமை வாய்ந்த கோயில். இத்திருக்கோயிலை புனரமைத்து, குடமுழுக்கு நடத்த அமைச்சர் அவர்கள் ஒப்புதல் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**பி.கே. சேகர்பாபு:** இந்த பசுபதீஸ்வரர் திருக்கோயிலுக்கு 1992-ஆம் ஆண்டு கடைசியாக குடமுழுக்கு நடைபெற்றது. இந்த ஆண்டு அதை ஆயிரம் ஆண்டு பழமையான திருக்கோயில் பட்டியலில் இணைத்து, அதற்குண்டான தொல்லியல் துறை, மண்டலக் குழு, மாநில வல்லுநர் குழு ஒப்புதல் பெறப்பட்டிருக்கின்றது. மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, எவ்வளவு விரைவாக அந்தப் பணிகள் மேற்கொள்ள முடியுமோ, அவ்வளவு விரைவாக திருப்பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**க. கார்த்திகேயன்:** சின்னசேலம் வட்டம், கூகையூர் ஊராட்சியில் அமைந்துள்ள சொர்ணபுரீஸ்வரர் திருக்கோவில் மிகவும் பழமை வாய்ந்த ஒரு திருக்கோவில். ஆயிரக்கணக்கான பக்தர்கள் தினமும் வந்துசெல்கின்ற ஒரு திருக்கோவில். இத்திருக்கோவிலைப் புனரமைத்து குடமுழுக்கு செய்ய அமைச்சர் அவர்கள் முன் வருவாரா என அறிய விரும்புகிறேன்.

**பி.கே. சேகர்பாபு:** உறுப்பினர் அவர்கள் கோரியிருக்கின்ற சொர்ணபுரீஸ்வரர் திருக்கோ வில் என்பது 2008-ஆம் ஆண்டு இறுதியாக குடமுழுக்கு நடைபெற்றது. தற்போது அந்த திருக்கோயிலுக்கும் மாநில வல்லுநர் குழு, தொல்லியல் துறை மற்றும் மண்டலக் குழுவின் ஒப்புதல் பெறப்பட்டு, மதிப்பீட்டுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. இது ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட திருக்கோவில். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றப்பிறகு தான், இந்த ஆயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட வருமானம் இல்லாத திருக்கோயிலுக்கு இந்த ஆண்டுகூட ரூபாய் 100 கோடியை ஒதுக்கீடு செய்து தந்திருக்கின்ற முதல்வர் திராவிட மாடல் அரசின் முதல்வர் நம்முடைய முதல்வர். அந்தத் திட்டத்தின்படி, இந்த ஆண்டே இந்தத் திருக்கோயிலினுடைய திருப்பணி மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு பதிலளித்தார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குடந்தை அ.இராஜாராமன்

ஜூலை 4 (2020)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.

கிளைக் கழகச் செயலாளர், நகரப் பொருளாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

குடந்தை நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

பேரறிஞர் அண்ணா பட்டு கூட்டுறவு சங்க தலைவராக பொறுப்பு வகித்தவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.